செ.வெ.எண்: 51/2020 நாள்: 25.01.2020

**திருவண்ணாமலை ஈசான்யம் மைதானத்தில் தேசிய வாக்காளர் தின விழா மாபெறும் ரங்கோலி கோலம் வரைந்து மெழுகுவர்த்தி ஏந்தி விழிப்புணர்வு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்றது...**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை நகராட்சி ஈசான்ய மைதானத்தில் இன்று (25.01.2020) மாவட்ட நிர்வாகம், வருவாய்த் துறை, மகளிர் திட்டம் சார்பாக நடைபெற்ற தேசிய வாக்காளர் தின விழாவில் 500-க்கும் மேற்பட்ட மகளிர் குழு உறுப்பினர்கள் மாபெறும் ரங்கோலி கோலம் வரைந்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் மெழுகுவர்த்தி ஏந்தி விழிப்புணர்வு ஏற்படுத்தி வாக்காளர் தின உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பொ. இரத்தினசாமி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. ஹரிதாஸ், திட்ட அலுவலர் மகளிர் திட்டம் திருமதி. சந்திரா, வருவாய் கோட்டாட்சியர்கள் திருமதி. ஸ்ரீதேவி (திருவண்ணாமலை), திருமதி. இல. மைதிலி (ஆரணி), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செல்வி. லாவண்யா, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. ஆனந்த்குமார், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி. மந்தாகினி, அரசு அலுவலர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை ஈசான்யம் மைதானத்தில் நடைபெற்ற வாக்காளர் தின விழாவில் இளம் வாக்காளர்களான முதல் முறை வாக்களித்த கல்லூரி மாணவ, மாணவிகள் மேடையில் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு 18 வயது முடித்த அனைவரும் வாக்காளர் பட்டியலில் தங்களை இணைத்துக் கொண்டு தேர்தலில் தங்கள் ஜனநாயக கடமையை ஆற்றிட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்கள். இதனை தொடர்ந்து முதல் முறையாக வாக்களித்த மூத்த வாக்காளர்கள் வந்தவாசி வட்டம் கன்னியப்பன் (வயது 87), கலசபாக்கம் வட்டம் இராஜு கோனார் ஆகியோரை மாவட்ட ஆட்சியர் அவர்கள் சால்வை அணிவித்து பரிசு வழங்கி கௌரவித்தார். மேலும், தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு பள்ளிக் கல்வி மாவட்ட அளவில் மற்றும் கல்லூரி அளவில் நடைபெற்ற பேச்சு, கட்டுரை, ஓவியம் போட்டிகளில் வெற்றி பெற்ற 43 மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசுக் கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினார். மாவட்ட ஆட்சியர் அவர்கள் வாக்காளர் முகாமில் சிறப்பாக பணியாற்றிய 13 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு நற்சான்றிதழ் மற்றும் தேர்தலில் சிறப்பான பணியாற்றிய மொத்தம் 37 உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.

இதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு மகளிர் திட்டம் சார்பாக வரையப்பட்டிருந்த மாபெறும் ரங்கோலி கோலம் முன்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் மெழுவர்த்தி ஏந்தி உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். மேலும், சமூகநலத் துறை மூலமாக திருநங்கைகளை கொண்டு தயாரிக்கப்பட்ட வாக்காளர் விழிப்புணர்வு குறும்படம் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அதிநவீன மின்னணு வீடியோ வாகனம் மூலம் திரையிட்டு காண்பிக்கப்பட்டது. தேசிய வாக்காளர் தின விழா நிறைவாக கல்லூரி மாணவிகளின் வளைவு நடை (Ramp Walk) மற்றும் விழிப்புணர்வு நடனம் நடைபெற்றது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**